ஆவியின் வரங்கள்

பரிசுத்த ஆவியின் வல்லமையால் நான் கிறிஸ்துவுக்காக சாட்சியாய் இருக்க ஆற்றலைப் பெற்றிருக்கிறேன்.[1]

தேவனுடைய அன்பு எனக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் என் இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறது.[2]

அனைவருடைய நன்மைகாக்கவும் பயன்படுத்த, ஆவியினுடைய அனுகிரகம் எனக்கு அருளப்பட்டிருக்கிறது.[3]

நான் அன்பை நாடுகிறேன், ஆவிக்குரிய வரங்களை வாஞ்சிக்கிறேன்:

அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தை போதிக்கும் வசனம், விசுவாசம், சுகமாகும் வரங்கள், அற்புதங்களை செய்யும் வல்லமைகள், தீர்க்கதரிசனம், ஆவிகளின் பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல் மற்றும் வியாக்கியானம் செய்தல்.

இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தாம் தீர்மானித்தபடியே ஒவ்வொருவருக்கும் பகிர்ந்துகொடுக்கிறார்.[4]

எனக்கு ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை எனக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்கிறேன்.[5]

ஆமென்.

[1] அப்போஸ்தலர் 1:8
[2] ரோமர் 5:5
[3] 1 கொரிந்தியர் 12:7
[4] 1 கொரிந்தியர் 12:8–11
[5] 2 தீமோத்தேயு 1:14

அப்போஸ்தலர் 1:8

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

ரோமர் 5:5

மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

1 கொரிந்தியர் 12:7

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.

1 கொரிந்தியர் 12:8 –11

எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

2 தீமோத்தேயு 1:14

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au